Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

**Press Release No: 22** **Date: 14.11.2025**

**VOC Port achieves impressive growth in cargo, container, and vessel performance in October 2025**

VOC Port, the vibrant seaport in the southern part of India, continues to showcase steady growth in both cargo and container traffic. During October 2025, the Port handled 3.94 Million Tonnes of cargo, including 75,110 TEUs of containers, registering a 10.94% and 20.83% increase respectively compared to the 3.55 Million Tonnes and 62,158 TEUs handled in October 2024.

Overall, up to October in this current financial year 2025-26, the Port has handled 25.23 Million Tonnes of cargo, including 5,03,204 TEUs of containers, representing a 2.71 % growth in overall cargo traffic and an 8.44 % increase in container traffic, comparing to the 24.56 Million Tonnes of cargo and 4,64,060 TEUs of containers handled in the same period of the previous financial year.

The Port’s strong performance is further highlighted by the rise in ship calls, with 1,064 vessels handled up to October 2025 as against 1,004 vessels during the corresponding period of the previous year.

In addition to the growth in cargo and container handling, the Port has also significantly enhanced its operational performance. The Container Vessels Average Turnaround Time (TRT) improved from 20.16 hours to 19.20 hours, among the best performer across the major ports of India.

Further enhancing its operational excellence, the Direct Port Entry (DPE) facility, commissioned in April 2025, has emerged as a key enabler of export growth. The facility has recorded impressive performance by handling 17,506 TEUs of export containers out of the total export laden volume of 2,05,484 TEUs up to October 2025, accounting for an 8.52 % share of total export containers.

The Port has also achieved significant growth across major commodities handled up to October 2025, when compared to the corresponding period of the previous financial year 2024-25. Petroleum Products recorded a growth of 11.16%, Edible Oil 8.57%, Fertilizer 34.18%, Fertilizer Raw Materials 8.32%, Rock Phosphate 9.85%, Salt an impressive 53%, and Construction Materials a remarkable 177.22%, reflecting the Port's expanding trade volumes and diversified cargo profile.

Commenting on the achievement, Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, stated that the sustained growth across all sectors reflects the Port's strong performance, enhanced efficiency, and customer-centric approach. He emphasized that the Port will continue to focus on infrastructure augmentation, digital transformation, and green initiatives to further strengthen its position as a key driver of maritime trade and economic development in the region.

The above details were furnished in a Press -Release by the V.O. Chidambaranar Port Authority today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu
SAGARMALA
Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 & ISO 45001:2018 and ISPS compliant Port
Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

**பத்திரிக்கை செய்தி :22** **நாள்: 14.11.2025**

**வ.உ.சிதம்பரனார் துறைமுகம் அக்டோபர் 2025-ல் மொத்த சரக்கு, சரக்குப்பெடடகம், மற்றும் கப்பல் செயல்திறன் ஆகியவற்றில் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளது**

இந்தியாவின் தென்பகுதியில் அமைந்துள்ள துறைமுகங்களில் மிகச்சிறந்த துறைமுகமான வ.உ.சிதம்பரனார் துறைமுகம், இந்த அக்டோபர் மாதத்தில், அனைத்து செயல்பாட்டு துறைகளிலும் வலுவான வளர்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறது. அக்டோபர் 2025 மாதத்தில் துறைமுகம் 3.94 மில்லியன் டன் சரக்குகளையும், 75,110 TEUs சரக்குப் பெட்டகங்களையும் கையாண்டுள்ளது. இது அக்டோபர் 2024-இல் கையாளப்பட்ட 3.55 மில்லியன் டன்கள் மற்றும் 62,158 TEUs டன் ஒப்பிடுகையில் முறையே 10.94 சதவீதம் மற்றும் 20.83 சதவீதம் வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

தற்போதைய 2025-26-ஆம் நிதியாண்டில் அக்டோபர் மாதம் வரை துறைமுகம் மொத்தமாக 25.23 மில்லியன் டன் சரக்குகளையும், 5,03,204 TEUs சரக்குப் பெட்டகங்களையும் கையாண்டுள்ளது. இது இதற்கு முந்தைய 2024–25 நிதியாண்டின் அதே காலப்பகுதியில் துறைமுகம் கையாண்ட 24.56 மில்லியன் டன் சரக்குகளை விட மொத்த சரக்குப் போக்குவரத்தில் 2.71% அதிக வளர்ச்சியையும், 4,64,060 TEUs சரக்குப் பெட்டகங்களை விட 8.44 சதவீதமும் அதிக வளர்ச்சியைப் வெளிக்காட்டியுள்ளது.

துறைமுகத்தின் வலுவான செயல்திறனை மேலும் வெளிப்படுத்துவது கப்பல் வருகைகளில் ஏற்பட்ட உயர்வாகும். அக்டோபர் 2025 வரை மொத்தம் 1,064 கப்பல்கள் கையாளப்பட்டுள்ளன, இது கடந்த நிதியாண்டின் அதே காலப்பகுதியில் கையாளப்பட்ட 1,004 கப்பல்களுடன் ஒப்பிடுகையில் உயர்வைக் காட்டுகிறது. இது துறைமுகத்தின் செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையில் கப்பல் நிறுவனங்களின் அதிகரித்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

சரக்கு மற்றும் சரக்குப் பெட்டக கையாளுதலின் வளர்ச்சி மட்டுமல்லாமல், துறைமுகம் தனது செயல்திறனிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பெற்றுள்ளது. சரக்குப்பெட்டக கப்பல்கள் துறைமுகத்திற்குள் வந்து செல்லும் நேரம் (Container Vessels Turnaround Time -TRT) 20.16 மணிநேரத்திலிருந்து 19.20 மணிநேரமாக குறைந்துள்ளது, இதன் மூலம் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் இந்தியாவின் முக்கிய துறைமுகங்களில் சிறந்த செயல்திறன் கொண்ட துறைமுகங்களில் ஒன்றாக திகழ்கிறது.

செயல்திறன் மேம்பாட்டை மேலும் வலுப்படுத்தும் வகையில், 2025 ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்ட நேரடி துறைமுக நுழைவு வசதி (Direct Port Entry- DPE) ஏற்றுமதி வளர்ச்சிக்கு முக்கிய ஊக்கமாக திகழ்கிறது. இந்த வசதி அக்டோபர் 2025 வரை ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த சரக்கு பெட்டகங்க அளவான 2,05,484 TEUs-களில் 17,506 TEUs சரக்குப் பெட்டகங்களைக் கையாண்டதின் மூலம் மொத்த ஏற்றுமதியின் 8.52 சதவீத பங்கைக் கொண்டுள்ளது சிறப்பிக்கத்தக்கது.

2025-26 நிதியாண்டின் அக்டோபர் மாதம் வரை வெவ்வேறு சரக்குகளைக் கையாளுதலில் துறைமுகம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. 2024–25 நிதியாண்டின் அதே

காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், பெட்ரோலியம் பொருட்கள் 11.16 சதவீதம், சமையல் எண்ணெய் 8.57 சதவீதம், உரம் 34.18 சதவீதம், உர மூலப்பொருட்கள் 8.32 சதவீதம், பாஸ்பேட் கல் 9.85 சதவீதம், உப்பு 531 சதவீதம் மற்றும் கட்டுமானப் பொருட்கள் 177.22 சதவீத வளர்ச்சியைப் பெற்றுள்ளன. இது துறைமுகத்தின் விரிவடைந்த வர்த்தகத்தையும் பல்துறை சரக்கு கையாளுதலையும் வெளிப்படுத்துகிறது.

இந்த சாதனை குறித்து கருத்து தெரிவித்த திரு சுசாந்த குமார் புரோஹித், 'இ.ர.ப.மி.பொ, வ.உ.சி துறைமுகத்தின் தலைவர் அனைத்து துறைகளிலும் ஏற்பட்ட வளர்ச்சி துறைமுகத்தின் வலுவான செயல்திறன், திறன் மேம்பாடு மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் பிரதிபலிப்பாகும் என தெரிவித்தார். மேலும் துறைமுகத்தின் உள்கட்டமைப்பு மேம்பாடு, மின்மய மாற்றம் மற்றும் பசுமை முயற்சிகளை வலுப்படுத்தி, பிராந்திய மற்றும் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் முன்னணி துறைமுகமாக திகழும் நோக்கில் துறைமுகம் தொடர்ந்து செயல்படும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி